DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 295/2025**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திருமதி..லட்சுமி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | அமுதன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026

1, 2 எதிரிகள் ஆஜர் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம்வட்டம் லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் திரு.தங்கவேல் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். வழக்கை விரைந்து முடிக்கவேண்டி ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 14.11.2020 ம் தேதி லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் தங்கவேல் பணியில இருந்த போது சண்முகப்பிரியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று லாலாப்பேட்டை நிலையக்குற்ற எண.611/2020 இதச பிரிவுகள் 294(பி),323 506(1) ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னிட்டு 16.11.2020 தேதி காலை 06.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் உதயகுமார்,மோகன் ஆகியோர்களை விசாரித்து பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சிகள் சண்முகப்பிரியன், மகேந்திரன், பார்வதி, கனககார்த்திக், கபில்ராஜ், மோகன். உதயகுமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளை 15.11.2020 ம் தேதி காலை 10.30 மணிக்கு மேலதாளியாம்பட்டி நான்கு ரோடு பால்பண்ணை அருகே நின்றிந்த எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். இத்துடன் புலன் விசாரணை முடித்து 24.12.2020 அன்று இதச பிரிவுகள் 294(பி),323, 506(1) ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

<u>1, முதல் 3 **எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

இறுதி அறிக்கையில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லைஎன்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணம் அனைத்தும் காவல் நிலையத்தில வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.23 18:15:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.